# Annai Hajira Women's College

## Melapalayam, Tirunelveli-05

(A Unit of As-Sathiq Educational Society)

(Affiliated to Manonmaniam Sundaranar University)



# NEWSPAPER CLIPPINGS

# 2022-2023

# DINAKARAN 22.06.2022



தினகரன் மாநகர்

**இந்த நாள்**

- சுபகிருது வருடம் ஆனி மாதம் 8-ம் நாள். புதன்கிழமை. தேய்பிறை.
- திதி : நவமி இரவு 8.46 மணி வரை; அதன் பிறகு தசமி.
- நட்சத்திரம் : ரேவதி நாள் முழுவதும்.
- யோகம் : சித்த யோகம். ▸ சூலம் : வடக்கு : பரிகாரம் : பால்.

- நல்ல நேரம் : காலை 9.30 - 10.30; மாலை 4.30 - 5.30.
- ராகு காலம் : மதியம் 12.00 - 1.30 வரை.
- எமகண்டம் : காலை 7.30 - 9.00 வரை.
- சந்திராஷ்டமம் : மகம், பூரம்.

**வானிலை**

# நெல்லையில் யோகா தின கொண்டாட்டம்



▸ சர்வதேச யோகா தினத்தையொட்டி தச்சநல்லூர் பூங்காவில் நடந்த யோகா பயிற்சியில் துணை மேயர் கே.ஆர்.ராஜூ பங்கேற்றார்.



▸ பாளை புஷ்பலதா வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளியில் சர்வதேச யோகா தின நிகழ்ச்சி நடந்தது.



▸ நெல்லை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் யோகா தினம் கடைபிடிக்கப்பட்டது.



▸ தமிழ்நாடு 3வது பட்டாலியன் என்சிசி மகளிரணி சார்பில் சிறப்பு யோகா பயிற்சி முகாம் பாளை சாரதா கல்லூரி வளாகத்தில் நடந்தது.




▸ மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி சார்பில் யோகா தினம் கொண்டாடப்பட்டது.



▸ சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு பாளை வ.உ.சி உள் விளையாட்டு மைதானத்தில் மாணவ, மாணவிகள் யோகா பயிற்சி செய்தனர்.



▸ நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உள்விளையாட்டு அரங்கில் நடந்த யோகா பயிற்சி முகாமை துணை வேந்தர் பிச்சுமணி, தலைமை வகித்து துவக்கி வைத்தார்.



▸ பாளை சேவியர் கல்லூரி விளையாட்டு திடலில் தமிழ்நாடு என்.சி.சி. பட்டாலியன் சார்பில் சர்வதேச யோகா பயிற்சி நடந்தது.




கல்லூரி, கிறிஸ்துராஜா, புஷ்பலதா பள்ளி மாணவ, மாணவிகள் 500 பேர் பங்கேற்றனர். யோகா தின பயிற்சியில் என்சிசி அலுவலர்கள் கந்தன், பாதுஷா, ஸ்டேன்லி, சிவக்குமார், செந்தில்குமார், பள்ளி என்சிசி அலுவலர்கள் அருள்ராஜ், ராதாகிருஷ்ணன், இம்மானுவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை சுபேதார் யோகலிங்கம் மற்றும் ராணுவவீரர்கள் செய்திருந்தனர்.

தேசிய யோகா தினத்தை முன்னிட்டு பாளை வ.உ.சி மைதானத்தில் நடந்த யோகா பயிற்சியில் மீனாட்சிபுரம் நெல்லை பாலர்வாடி நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி மாணவ மாணவிகள் கலந்துகொண்டு சான்றிதழ்களும் கேடயமும் பெற்றனர். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கான பாராட்டு விழா பள்ளியில் நடைபெற்றது. பள்ளியின் தாளாளர் ரீனா துரை கலந்துகொண்டு மாணவ-மாணவிகளை பாராட்டினார். இவ்விழாவில் பள்ளியின் யோகா ஆசிரியர் அழகேசராஜா கலந்து கொண்டார். விழா ஏற்பாடுகளை பள்ளியின் தலைமை ஆசிரியை சங்கரி மற்றும் ஆசிரியைகள் செய்திருந்தனர்.

நெல்லை வண்ணார்பேட்டை விவேகானந்தா வித்யாஷ்ரம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் உலக யோகா தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு யோகா பயிற்சி நடந்தது. பள்ளியின் சேர்மன் சிவ சேதுராமன் தலைமை வகித்தார். தாளாளர் திருமாறன் முன்னிலை வகித்தார். பள்ளி முதல்வர் முருகவேல் சிறப்புரையாற்றினார்.

துணை முதல்வர் ஜேக்கட்துரை ராஜ் யோகாவின் சிறப்பினை எடுத்துரைத்தார். இதில் உடற்கல்வி இயக்குனர் உமாநாத், மாணவர்களுக்கு யோகா பயிற்சி அளித்தார்.

# DINAKARAN 16.08.2022

ஆணையாளர் குமாரவேல் தேசியக் கொடியேற்றி வைத்து பேசினார்.

றார். பதிவாளர்(பொறுப்பு) அண்ணாதுரை தலைமை வகித்தார். விழாவில் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், தேசிய மாணவர் படையின் அணி வகுப்பு ஆகியவை இடம் பெற்றது.

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி நடந்த சுதந்திர தின விழாவில் பாளையங்கோட்டை தொகுதி எம்எல்ஏ அப்துல் வஹாப் தேசியக் கொடியேற்றி வைத்து பேசினார். கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார். தாளாளர் குதா முகம்மது, அஸ்லாமிக் கல்விக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நிஜாமுத்தீன், அமானுல்லாஹ், காதர் மைதீன், முஹம்மது ஹனீப், காஜா நஜிமுத்தீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்

ராமலெட்சுமி சுதந்திர தின உரையாற்றினார். கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் அலவலக உதவியாளர்கள் விழாவில் கலந்து கொண்டனர். தமிழ்த்துறை தலைவர் ஷப்ரின் முனீர் நன்றி கூறினார்.

மேலப்பாளையம் முஸ்லீம் மேல்நிலைப் பள்ளியில் நடந்த சுதந்திர தின விழாவில் பள்ளித் தாளாளர் எல்கேஎஸ் முகம்மது மீரா முகைதீன் தலைமை வகித்து தேசிய கொடியேற்றினார். முஸ்லீம் கல்வி கமிட்டி தலைவர் அப்துல் காதர், துணைத் தலைவர் முகம்மது அலி அக்பர் முன்னிலை வகித்தனர். முஸ்லீம் கல்விக் கமிட்டி பொருளாளர் அப்துல் மஜீத் வரவேற்றார். முன்னாள் கவுன்சிலர் பரமசிவம் கலந்து கொண்டு பேசினார்.

ஆசிய அளவில் நடந்த கராத்தே கட்டா பிரிவில் முதலிடம் பெற்ற மாணவர் முகம்மது ரியாஸ்கான், கடந்த வாரம் நடந்த சாரல் திருவிழாவில் சிலம்பம் போட்டியில் முதலிடம் பெற்ற உடற்கல்வி ஆசிரியர் முகைதீன் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளித் தலைமை ஆசிரியர் ஷேக் முகம்மது மற்றும் மாணவ, மாணவிகள் சுதந்திர தின உரை நிகழ்த்தினர். நிகழ்ச்சியில் முஸ்லீம் கல்விக் கமிட்டி உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள், உதவி தலைமை ஆசிரியர்

# DINAMALAR 26.08.2022



நெல்லையில்

## கண்தான விழிப்புணர்வு மனித சங்கிலி

நெல்லை, ஆக.26-

தேசிய கண்தான இருவார விழா ஆகஸ்டு மாதம் 25-ந்தேதி முதல் செப்டம்பர் மாதம் 8-ந்தேதி வரை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி நெல்லை டாக்டர் அகர்வால் கண் ஆஸ்பத்திரியில் கண்தான விழிப்புணர்வு மனித சங்கிலி நேற்று நடைபெற்றது. இந்த மனித சங்கிலியை நெல்லை மாநகர போலீஸ் துணை கமிஷனர் (கிழக்கு) சீனிவாசன் தொடங்கி வைத்தார். நெல்லை டாக்டர் அகர்வால் கண் ஆஸ்பத்திரி மண்டல மருத்துவ இயக்குனர் லயனல் ராஜ், கண்தானம் செய்வதன் அவசியம் குறித்து பேசினார்.

பாளையங்கோட்டை சாராள் தக்கர் பெண்கள் கல்லூரி, இதய ஜோதி நர்சிங் கல்லூரி, வள்ளியூர் நேரு நர்சிங் கல்லூரி, மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, புதூர் செயின்ட் மரியம் குருப் ஆப் காலேஜஸ், பெருமாள்புரம் புனித ஜோசப் பள்ளி, டாக்டர் அகர்வால் ஆப்டோமெட்ரி கல்லூரி மாணவ-மாணவிகள், டாக்டர் அகர்வால் கண் ஆஸ்பத்திரி டாக்டர்கள், ஊழியர்கள் கண்தான விழிப்புணர்வு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு சாலையோரம் மனித சங்கிலியாக அணிவகுத்து நின்றனர்.

டாக்டர் அகர்வால் ஆப்டோமெட்ரி கல்லூரி மாணவ- மாணவிகள் சார்பில், கண்தானம் செய்வதின் அவசியம் குறித்து விழிப்புணர்வு படங்கள் வரைந்து காட்சிப்படுத்தி இருந்தனர். நிகழ்ச்சிகளை மேலாளர் கோமதிநாயகம் தொகுத்து வழங்கினார். விழாவை முன்னிட்டு, பள்ளி, கல்லூரி மாணவ- மாணவிகளுக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏற்பாடுகளை கண் வங்கி ஒருங்கிணைப்பாளர் ஜெகதீஷ், கருவிழிப்பிரிவு டாக்டர் ராணிலட்சுமி, உதவி பொதுமேலாளர் பிரபு, உதவி மேலாளர் அகிலன், பேச்சிமுத்து ஆகியோர் செய்திருந்தனர்.

# THE HINDU TAMIL 26.08.2022



திருநெல்வேலி டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையும், பல்வேறு கல்வி நிறுவனங்களும் இணைந்து நடத்திய கண்தான விழிப்புணர்வு மனிதச் சங்கிலியில் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

# நெல்லையில் கண்தான விழிப்புணர்வு மனிதச் சங்கிலி

திருநெல்வேலி

தேசிய கண்தான இருவார விழாவை முன்னிட்டு திருநெல்வேலி டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையும், பல்வேறு கல்வி நிறுவனங்களும் இணைந்து கண்தான விழிப்புணர்வு மனிதச் சங்கிலியை நடத்தின.

திருநெல்வேலி மாநகர காவல் துணை ஆணையர் வி.ஆர்.ஸ்ரீனிவாசன் தொடங்கி வைத்தார். இந்திய மருத்துவ சங்க திருநெல்வேலி கிளை நிர்வாகிகள் ரூபஸ் பொன்னையா, ராஜா எஸ். விக்னேஷ், முகம்மது இப்ராகிம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருநெல்வேலி டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மண்டல மருத்துவ இயக்குநர் டாக்டர் டி.லயனல்ராஜ் விழிப்புணர்வு உரையாற்றினார்.

பாளையங்கோட்டை சாராள் தக்கர் பெண்கள் கல்லூரி, இதய ஜோதி செவிலியர் கல்லூரி, வள்ளியூர் நேரு செவிலியர் கல்லூரி, மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, புதூர் செயின்ட் மரியம் கல்விக் குழுமம், பெருமாள்புரம் புனித ஜோசப் பள்ளி மற்றும் டாக்டர் அகர்வால் ஆப்டோமெட்ரி கல்லூரி மாணவிகள் மனிதச் சங்கிலியில் பங்கேற்றனர். மேலாளர் கோமதிவிநாயகம் தொகுத்து வழங்கினார். கண் வங்கி ஒருங்கிணைப்பாளர் ஜெகதீஷ், மருத்துவர் ராணிலட்சுமி, உதவி பொதுமேலாளர் பிரபு, உதவி மேலாளர் அகிலன் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

DINAKARAN 26.08.2022

டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை சார்பில்

# கண்தான விழிப்புணர்வு மனித சங்கிலி



▶ நெல்லை வண்ணார்பேட்டை அகர்வால் மருத்துவமனை முன்பாக தேசிய கண்தான விழிப்புணர்வு மனித சங்கிலியை மாநகர போலீஸ் துணை கமிஷனர் ஸ்ரீனிவாசன் தொடங்கி வைத்தார்.

நெல்லை, ஆக. 26: தேசிய கண்தான இருவார விழாவையொட்டி நெல்லை டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து மருத்துவமனை முன்பு மாணவிகளின் விழிப்புணர்வு மனித சங்கிலியை நடத்தியது.

ஆண்டுதோறும் ஆக.25 முதல் செப்.8 வரை தேசிய கண்தான விழிப்புணர்வு வாரமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனையடுத்து நெல்லையில் நேற்று அகர்வால் கண் மருத்துவமனை முன்பு மனிதசங்கிலி நிகழ்ச்சி நடந்தது.

இதனை போலீஸ் துணை கமிஷனர் சீனிவாசன் துவக்கி வைத்தார். இந்திய மருத்துவ சங்க நெல்லை கிளை நிர்வாகிகள் டாக்டர்கள் ரூபஸ் பொன்னையா, ராஜா எஸ்.விக்னேஷ், முகம்மது இப்ராகிம் முன்னிலை வகித்தனர்

டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் மண்டல மருத்துவ இயக்குநர் பேராசிரியர் டாக்டர் லயனல்ராஜ் கண்தானம் செய்வதின் அவசியத்தையும், உலக அளவில் கருவிழி பார்வை இழப்பு தடுப்பதை குறித்தும், இங்கு உலக தரத்தில் தையல் இல்லா கருவிழி மாற்று அறுவை சிகிச்சை நவீன தொழில்நுட்பம் மூலம் செய்யப்படுகிறது என்றார்.

நிகழ்ச்சியில் சாரர்ள் தக்கர் பெண்கள் கல்லூரி, இதயஜோதி நர்சிங் கல்லூரி, வள்ளியூர் நேரு நர்சிங் கல்லூரி, மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, புதூர் செயின்ட் மரியம் குரூப் ஆப் கல்லூரி, பெருமாள்புரம் ஜோசப் பள்ளி, அகர்வால் ஆப்டோமெட்ரிக் கல்லூரி மாணவிகள், மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி பங்கேற்றனர். டாக்டர் அகர்வால் ஆப்டோமெட்ரி கல்லூரி மாணவர்கள் கண்தானம் குறித்து விழிப்புணர்வு படங்கள் வரைந்து காட்சிப்படுத்தினர்.

நிகழ்ச்சிகளை மேலாளர் கோமதிநாயகம் தொகுத்து வழங்கினார். ஏற்பாடுகளை கண் வங்கி ஒருங்கிணைப்பாளர் ஜெகதீஷ், கருவிழிப்பிரிவு மருத்துவர் டாக்டர் ராணி லட்சுமி, உதவிப் பொது மேலாளர் பிரபு, உதவி மேலாளர் அகிலன், பேச்சிமுத்து ஆகியோர் செய்திருந்தனர்.

# DINAMANI 26.08.2022

## அகர்வால் கண் மருத்துவமனை சார்பில்

# தேசிய கண் தான விழிப்புணர்வு மனிதச் சங்கிலி



கண்தான விழிப்புணர்வு மனிதச் சங்கிலியில் பங்கேற்ற டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் மண்டல மருத்துவ இயக்குநர் பேராசிரியர் டி.லயனல்ராஜ். மாநகர காவல் துணை ஆணையர் (கிழக்கு) வி.ஆர். ஸ்ரீனிவாசன் உள்ளிட்டோர்.

திருநெல்வேலி, ஆக. 25: தேசிய கண் தான விழிப்புணர்வு வாரத்தை (ஆக.25-செப்.8) முன்னிட்டு, டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை சார்பில், கல்வி நிறுவனங்களுடன் இணைந்து கண் தான விழிப்புணர்வு மனிதச் சங்கிலி, திருநெல்வேலி வண்ணார்ப்பேட்டையில் உள்ள அம்மருத்துவமனை முன் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் மண்டல மருத்துவ இயக்குநரான பேராசிரியர் டாக்டர் டி.லயனல் ராஜ் தலைமை வகித்தார். மாநகர காவல் துணை ஆணையர் (கிழக்கு) வி.ஆர். ஸ்ரீனிவாசன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று மனிதச் சங்கிலியை தொடங்கி வைத்தார்.

இதில், பாளையங்கோட்டை சாராள் தக்கர் பெண்கள் கல்லூரி, இதய ஜோதி நர்சிங் கல்லூரி, வள்ளியூர் நேரு நர்சிங் கல்லூரி, மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, புதூர் செயின்ட் மரியம் குரூப் ஆப் காலேஜஸ், பெருமாள்புரம் புனித ஜோசப் பள்ளி, டாக்டர் அகர்வால் ஆப்டோமெட்ரி கல்லூரி மாணவர்- மாணவிகள், டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவர்கள், ஊழியர்கள் பங்கேற்றனர்.

தொடர்ந்து, டாக்டர் அகர்வால் ஆப்டோமெட்ரி கல்லூரி மாணவ மாணவிகள் சார்பில் கண்தானத்தின் அவசியம் குறித்து விழிப்புணர்வு படங்கள் வரைந்து காட்சிப்படுத்தி இருந்தனர்.

பள்ளி - கல்லூரி மாணவர்-மாணவிகளுக்காக வரும் செப்டம்பர் 8 ஆம் தேதி வரை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. நிகழ்ச்சிகளை மருத்துவமனை மேலாளர் கோமதிநாயகம் தொகுத்து வழங்கினார். ஏற்பாடுகளை கண் வங்கி ஒருங்கிணைப்பாளர் ஜெகதீஷ், கருவிழிப்பிரிவு மருத்துவர் ராஜலட்சுமி, உதவிப்பொது மேலாளர் பிரபு, உதவி மேலாளர் அகிலன், பேச்சிமுத்து ஆகியோர் செய்திருந்தனர்.

# DINAKARAN 28.08.2022

## மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா கல்லூரியில்

# பேராசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி



நெல்லை, ஆக. 28: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியும், ஐசிடி அகாடமியும் இணைந்து கல்லூரி பேராசிரியர்களுக்கான மூன்று நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தியது. இதில் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரி பேராசிரியர்கள் பங்கேற்றனர். இதற்கான நிறைவு விழாவில் கல்லூரி துணை முதல்வர் ஷப்ரின் முனீர் வரவேற்றார். கல்லூரித் தலைவர் செய்யது அகமது தலைமை வகித்துப் பேசினார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது, கல்லூரி பொருளாளர் ஜாபர்சாதிக் ஆகியோர் பேசினர்.

மூன்று நாட்கள் நடந்த பயிற்சியில் பயிற்சியாளர் நிர்மல்குமார் பங்கேற்று பேராசிரியர்களுக்கு பயிற்சி அளித்தார். விழாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கணினி அறிவியல் துறை பேராசிரியர் மற்றும் ஆய்வியல் துறை இயக்குநர் பாலமுருகன் பேசினார். அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி கணினி அறிவியல் துறை உதவி பேராசிரியர் யோகாசினி நன்றி கூறினார். பயிற்சியை கல்லூரி கணினி அறிவியல் துறைத் தலைவர் மற்றும் ஐசிடி ஒருங்கிணைப்பாளர் அனிதா ஒருங்கிணைத்தார். 30 பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

# DINAMALAR 07.01.2023



■ மேலச்செவலில் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் நடந்தது.

## மேலச்செவலில் இலவச மருத்துவ முகாம்

திருநெல்வேலி, ஜன. 7–

மேலச்செவல் கிராமத்தில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடந்தது.

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி 'ஹோப்' அமைப்பின் சார்பில் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் ஒன்றான மேலச்செவலில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடந்தது.

முகாமிற்கு கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார். தாளாளர் ஜுஹரா முகம்மது, மேலச்செவல் டவுன் பஞ். தலைவர் அன்னபூரணி முன்னிலை வகித்தனர். முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக் வாழ்த்துரை வழங்கினார். முகாமில் அகர்வால் கண் ஆஸ்பத்திரி மருத்துவக்குழுவினர் கிராம மக்களுக்கு கண் பரிசோதனை மேற்கொண்டனர். அப்பல்லோ பார்மசி மருத்துவக் குழுவினர் ரத்தத்தில் சர்க்கரை அளவு, ரத்த அழுத்த பரிசோதனை செய்தனர்.

ஏற்பாடுகளை 'ஹோப்' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ராமலட்சுமி, பேராசிரியை லாவண்யா, ரேவதி மற்றும் மாணவிகள் செய்திருந்தனர்.

# DINAKARAN 19.01.2023

## மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா



நெல்லை, ஜன. 19: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா நடந்தது. கல்லூரியின் உள் தர உத்தரவாத அமைப்பும், தமிழ்த்துறையும் இணைந்து நடத்திய விழாவில் கல்லூரியின் உள்தர உத்தரவாத அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தமிழ்த்துறை தலைவர் ஷப்ரீன் முனீர் வரவேற்றார். கல்லூரித் தலைவர் பொறியாளர் செய்யது அகமது தலைமை வகித்தார். தாளாளர் பொறியாளர் குதா முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக், கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா ஆகியோர் பேசினர். பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் இணைந்து சமத்துவ பொங்கல் வைத்தனர். தொடர்ந்து கல்லூரி மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது. நெசவுத் தொழிலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் போசிரியர்கள் அனைவரும் கைத்தறி புடவை அணிந்து விழாவில் பங்கேற்றனர். இறுதியில் கல்லூரியின் உள்தர உத்தரவாத அமைப்பின் துணை ஒருங்கிணைப்பாளர் வேதியியல் துறைத் தலைவர் அனுராதா நன்றி கூறினார்.

# DINAKARAN 26.01.2023

தினகரன் மாநகர்

தேசிய வாக்காளர் தினத்தையொட்டி

## நெல்லையில் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு





▶ தேசிய வாக்காளர் தினத்தையொட்டி நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கல்லூரி மாணவிகள் சிலம்பம் ஆடி அசத்தினர். அடுத்த படம்: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி மாணவிகள் சார்பில் விழிப்புணர்வு பேரணி நடந்தது.

நெல்லை, ஜன.26: தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நெல்லையில் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி மற்றும் ஊர்வலம் நடந்தது.

இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் ஆண்டு தோறும் ஜன 25ம் தேதி தேசிய வாக்காளர் தினமாக அறிவிக்கப்பட்டு கடை பிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி நேற்று (ஜன.25) நெல்லையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்தாண்டு 'வாக்களிப்பதே சிறந்தது. நிச்சயம் வாக்களிப்பேன்' என்ற குறிக்கோளுடன் வாக்காளர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி வாக்காளர் விழிப்புணர்வு சிறப்பு நிகழ்ச்சி நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று காலை நடந்தது. பயிற்சி கலெக்டர் கோகுல், விழிப்புணர்வு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். தொடர்ந்து வாக்களிப்பது குறித்து வாக்காளர் உறுதி மொழி ஏற்கப்பட்டது.

மகளிர் சுயஉதவிக்குழு பெண்கள் வாக்காளர் விழிப்புணர்வு வண்ணக் கோலங்களை வரைந்தனர். மேலும் வாக்களிப்பதே சிறந்தது. நிச்சயம் வாக்களிப்பேன் என்ற உறுதிமொழி பேனரில் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கையெழுத்திட்டனர். நிகழ்ச்சியில் நேர்முக உதவியாளர் கணேஷ்குமார் மாற்றுதிறன் நல அலுவலர் பிரம்மநாயகம், தேர்தல் வட்டாட்சியர் கந்தப்பன், பாளை தாசில்தார் அருள் பிரகாஷ், துணை வட்டாட்சியர் பழனி, செஞ்சிலுவை சங்கம் சபேசன், ஆசிரியர் கணபதி சுப்பிரமணியன், உள்ளிட்ட பலர் பேசினர்.

தொடர்ந்து ஜான்ஸ் கல்லூரி மற்றும் ராணி அண்ணா மகளிர் கல்லூரிகளை சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்று சிலம்பம், தீப்பந்தம் சுற்றுதல் உள்ளிட்ட சாகச நிகழ்ச்சிகளை நடத்தினர். தொடர்ந்து மாணவ, மாணவிகள் நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் இருந்து செல்லபாண்டியன் சிலை வரை பேனர்களை ஏந்தியபடி ஊர்வலமாக சென்று பொதுமக்கள் மத்தியில் வாக்களிப்பது அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். ராணி அண்ணா மகளிர் கல்லூரி மாணவிகள் பேண்ட் வாத்தியம் இசைத்தப்படி சென்றனர்.

# ULLAATCHI SAARAL 26.01.2023

RNI. Reg.No. TNTAM/2019/78889

# உள்ளாட்சி சாரல்

உள்ளாட்சியே இந்தியாவின் நாடித்துடிப்பு

• சென்னை • மதுரை

தினசரி காலை நாளிதழ்

**மேலப்பாளையம்**

## அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரி சார்பில் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணி



நெல்லை.ஜன.26: திருநெல்வேலி மாநகரம் மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் அமைப்பின் சார்பில் 13-வது தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வுப் பேரணி மேலப்பாளையத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு கல்லூரியின் தலைவர் பொறியாளர் எம்.கே. சைபுதீன் அகமது தலைமை தாங்கினார். செயலாளர் பொறியாளர் எம்.ஜே. முகம்மது பொருளாளர் ஓ.கே. ஜாபர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் முதல்வர் டாக்டர் கே.ரஜப் பாத்திமா வரவேற்றார். அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரி மாணவிகள் வாக்கு அளிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு மேலப் பாளையம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக பேரணியாக வந்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டு நல பணித்திட்ட அலுவலர் டாக்டர் டி.இராமலட்சுமி மற்றும் கல்லூரி பேராசிரியைகள், அலுவலக மேலாளர் காஜா உள்பட பல செய்திருந்தனர்.

# DINAKARAN 12.02.2023

அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி சார்பில்

## மேலப்பாளையத்தில் சிறப்பு மருத்துவ முகாம்



நெல்லை, பிப். 12: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் நெல்லை அன்னை வேளாங்கன்னி பன்னோக்கு மருத்துவமனையும் இணைந்து நடத்திய மகப்பேறு நலம் மற்றும் நுரையீரல் நல சிறப்பு மருத்துவ முகாம் மேலப்பாளையம், புதுமனைப்பள்ளிவாசல் பஜார் திடல், அல் பயான் நர்சரி மற்றும் துவக்கப் பள்ளியில் வைத்து நடந்தது.

விழாவில் கல்லூரி முதல்வர் ரஜப்பாத்திமா வரவேற்றார். கல்லூரித்தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார். கல்லூரித் தாளாளர் குதா முகம்மது, அல் பயான் நர்சரி மற்றும் துவக்கப் பள்ளி தாளாளர் தானி அப்துல் காதர், பள்ளி செயலாளர் அப்துல் ஹமீது, பள்ளி பொருளாளர் பேராசிரியர் அப்துல் ஜப்பார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக் பேசினார். மகப்பேறியல் மற்றும் மகளிர் நல சிறப்பு டாக்டர் தீபாஞ்சலி பானர்ஜி, நுரையீரல் நல சிறப்பு மருத்துவர் முஹைதீன் ஹாஜி, மகப்பேறியல் மற்றும் மகளிர் நல சிறப்பு டாக்டர் செல்வன் ஆகியோர் பேசினர். முகாமில் மருத்துவர்கள் மற்றும் குழுவினர் சேர்ந்து மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டனர். மேலப்பாளையத்தில் உள்ள பொது மக்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். முகாம் ஏற்பாடுகளை கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து செய்திருந்தனர். இயற்பியல் துறைத் தலைவர் ஆயிஷா நிலோபர் நன்றி கூறினார்.

# DINAMANI 18.02.2023

## அன்னை ஹாஜிரா கல்லூரியில் பட்டமளிப்பு விழா



விழாவில், மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஜி.எம்.அக்பர் அலி.

திருநெல்வேலி, பிப். 18: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியின் 19ஆவது ஆண்டு விழா, 15-ஆவது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு, அஸ்ஸாதிக் கல்விக் கூட்டமைப்பு தலைவர் எஸ்.கே. செய்யது அஹமது தலைமை வகித்தார். கூட்டமைப்பின் பொருளாளர் ஜாபர் சாதிக் மற்றும் கல்லூரித் தாளாளர் குதா முஹம்மது ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஜி.எம். அக்பர் அலி கலந்துகொண்டு 284 இளங்கலை மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

முன்னதாக நடைபெற்ற ஆண்டு விழாவில், ஷிபா மருத்துவமனை நிர்வாக இயக்குநர் முஹம்மது ஷாபி, முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி தாளாளர் எல்.கே.எஸ்.மீரான் மைதீன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார். திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் சிவகிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

# DINAKARAN 18.02.2023

## மேலப்பாளையம்

# அன்னை ஹாஜிரா கல்லூரியில் 284 மாணவிகளுக்கு பட்டம்

## ஐகோர்ட் முன்னாள் நீதிபதி அக்பர் அலி வழங்கினார்




மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் சென்னை ஐகோர்ட் முன்னாள் நீதிபதி அக்பர் அலி மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

நெல்லை, பிப். 19: மேலப்பாளையம அனனை ஹாஜிரா கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் 284 மாணவிகளுக்கு சென்னை ஐகோர்ட் முன்னாள் நீதிபதி அக்பர் அலி பட்டங்களை வழங்கினார்.

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் 19ஆம் ஆண்டு விழா மற்றும் 15-வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. ஆண்டு விழாவை முன்னிட்டு முதலாம் ஆண்டு வணிகவியல் மாணவி நவ்சபா கிராஅத் ஓதினார். விழாவிற்கு கல்லூரி தலைவர் செய்யது அஹமது தலைமை வகித்து பேசினார்.

கல்லூரித் தாளாளர் குதா முகம்மது, அஸ்ஸாதிக் கல்விக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நிஜாமுத்தீன், காதர், அமானுல்லாஹ், காஜா நஜிமுத்தீன், முஹம்மது ஹனீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அஸ்ஸாதிக் கல்விக் கூட்டமைப்பின் பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். முதல்வர் ரஜப் பாத்திமா ஆண்டறிக்கை வாசித்தார். விழாவில் நெல்லை மாநகராட்சி கமிஷனர் சிவ கிருஷ்ணமூர்த்தி, நெல்லை ஷிபா மருத்துவமனை நிர்வாக இயக்குநர் முஹம்மது ஷாபி, எம்கேஎம் கபீர், மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி தாளாளர் எல்கேஎஸ் மீரான் மைதீன், நிஸார் ஆகியோர் பேசினர்.

தொடர்ந்து நடந்த பட்டமளிப்பு விழாவில் சென்னை ஐகோர்ட் முன்னாள் நீதிபதி அக்பர் அலி மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசினார். இந்த விழாவில் 284 இளங்கலை மாணவிகள் பட்டம் பெற்றனர்.

பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் பகுதி-1 பொதுத்தமிழ், கணினி அறிவியல், கணிதம், ஆங்கிலம் மற்றும் இயற்பியல் ஆகிய துறைகளில் மொத்தம் 7 மாணவிகள் இடம் பெற்றிருந்தனர். தமிழ்த்துறைத் தலைவர் ஷப்ரின் முனீர் நன்றி கூறினார்.

# DINATHANTHI 18.02.2023



மேலப்பாளையம்

# அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

நெல்லை, பிப்.19-

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. தலைவர் செய்யது அகமது தலைமை தாங்கினார். அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக், கல்லூரி தாளாளர் குதா முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார்.

ஓய்வு பெற்ற ஐகோர்ட்டு நீதிபதி அக்பர் அலி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 284 மாணவிகளுக்கு பட்டம் வழங்கி பேசினார்.

முன்னதாக கல்லூரி ஆண்டு விழா நடந்தது. ஆண்டு விழாவில் நெல்லை மாநகராட்சி ஆணையாளர் சிவகிருஷ்ணமூர்த்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார்.

விழாக்களில் எம்.கே.எம்.புகாரி, எம்.கே.எம்.முகமது ஷாபி, மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி தாளாளர் மீரான்மைதீன், மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல தலைவர் கதிஷா இக்லாம் பாஷிலா, கவுன்சிலர்கள் ரசூல்மைதீன், முகைதீன் அப்துல் காதர், சேக் மன்சூர், சகாய ஜூலியட் மேரி, அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு உறுப்பினர்கள் நிஜாமுதீன், காதர், வி.எஸ்.டி.அமானுல்லாஹ், காஜா நிஜாமுதீன், முகமது ஹனீப் மற்றும் நிஜார், அனிஸ்பாத்திமா, அந்தோணி செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# DINAKARAN 04.03.2023

தினகரன் மாநகர்

# மேலப்பாளையம் கல்லூரியில் விளையாட்டு விழா

நெல்லை, மார்ச் 4: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் விளையாட்டு விழா நடந்தது. கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை வகித்து பேசினார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது மற்றும் உஸ்மான் முன்னிலை வகித்தனர். கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக், பொறியாளர் கார்த்திக்கேயன் ஆகியோர் பேசினர். நிகழ்ச்சியில் அபுபக்கர் சித்திக், தவுலத் பீவி கலந்து கொண்டு கல்லூரி கொடியேற்றிவைத்து மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர். ஒலிம்பிக் டார்ச் ஏற்றப்பட்டது. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. தமிழ் துறை தலைவர் ஷப்ரின் முனீர் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உடற்கல்வி ஆசிரியர் அமுதா செய்திருந்தார்.




மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா கல்லூரியில் விளையாட்டு விழா நடந்தது.

**THE HINDU 10.03.2023**

The Hindu - 10-03-2023

# Road safety rally organised as part of Women's Day

The Young Women Christian Association (YWCA), in association with Shanthi Driving School, took out a road safety rally in Palayamkottai here on Thursday to mark the International Women's Day. The rally was organised to create awareness of the need to follow road safety rules to ensure the safety of every road user and stress the need for driving responsibly. Students from Sarah Tucker College, St. Xavier's College, St. John's College, Anna University, Annai Hajira College, Government Arts and Science College, Manur, participated in the rally, which was flagged off by S. Sameena, District Judge-cum-Chairman, Permanent Lok Adalat, Tirunelveli, near Palayamkottai bus stand, in the presence of C.P. Prabhakaran, Motor Vehicle Inspector, Regional Transport Office, Tirunelveli. The rally passed through South Bazaar and VOC ground before reaching the starting point.

# THE HINDU TAMIL 13.03.2023

## காவேரி மருத்துவமனை சார்பில்

# உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி!



நெல்லை, மார்ச்.9–

ஆண்டுதோறும் மார்ச் மாதம் 2–வது வியாழக்கிழமை சர்வதேச சிறுநீரக தினம் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு பொதுமக்களிடையே சிறுநீரக பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் பேரணி பாளை செயின்ட் சேவியர்ஸ் பள்ளி மைதானத்தில் இருந்து புறப்பட்டு முருகன்குறிச்சி அரசு சித்த மருத்துவக்கல்லூரி வந்தடைந்தது. இந்நிகழ்ச்சியில் டாக்டர் லட்சுமணண் வரவேற்று பேசினார். பேரணியை காவேரி மருத்துவமனையின் சிறுநீரகப்பிரிவு மருத்துவர் டாக்டர் பாலசுப்ரமணியம் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

மருத்துவமனை நிர்வாக மேலாளர்வைரமுத்து நன்றி கூறினார். இதில் சிறப்பு விருந்தினர்களாக பாளை சாராள் தக்கர் கல்லூரி முதல்வர் உஷா காட்வின், மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேரணியில் பாளை சாராள் தக்கர் கல்லூரி, மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரி மாணவிகள்மற்றும்காவேரி மருத்துவமனை மருத்துவர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியும், விழிப்புணர்வு வாசகங்களை கூறியவாறு சென்றனர். இதற்கான ஏற்பாடுகளை காவேரி மருத்துவமனை மண்டல மார்க்கெட்டிங் மேலாளர் கார்த்திக், மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் செய்திருந்தனர்.

# THE HINDU – 21.03.2023

Tuesday, March 21, 2023
MADURAI

# CAMPUS CONNECT

**Girls bag prizes**
The Department of Criminology and Criminal Justice of Manonmaniam Sundaranar University, Tirunelveli, conducted various competitions on the theme, 'Women in cyber space' as a part of International Women's Day celebration on March 8. Earlier, a college-level first round competitions were conducted on the theme, 'Women in public and private space' at Annai Hajira Women's College, Melapalayam. A total of 14 students bagged pri0zes in creative writing, elocution, slogan writing and poster making, and 11 among them participated in the second round competitions at the university. The students were accompanied by R. Lavanya, Assistant Professor, Department of Physics. Hajira Kulsum Ali Akbar of I B.Com and J. Lubna of II B.Com won first prize and second prize, respectively in English elocution contest.

**Talk on consumer rights**
Consumer Club of V.O.C.College of Education, Thoothukudi, organised a lecture on 'Consumer rights and awareness' on March 15. S. Kanthimathinathan, HoD (Rtd), Department of

THE HINDU – 24.04.2023

## Wins first prize

S.Hisaanah, III B.Sc Computer Science student of Annai Hajira Women's College, Melapalayam, Tirunelveli district, bagged laurels in a national-level essay competition conducted by TATA Group in 13 languages. Hisaanah secured first prize for writing the essay in the regional language, Tamil, under the title, 'Building India.' She received the medal and Certificate of Excellence from the President in New Delhi on April 17. TATA Group presented her a cheque for ₹35,000. President S.K.Syed Ahamed, secretary S.K. Kutha Mohamed, treasurer O.K. Jafar Sauthik, Principal Rajab Fathima congratulated her.

## THE HINDU – 16.05.2023

### Entrepreneurship cell

Entrepreneurship Development Cell of Annai Hajira Women's College, Melapalayam, in association with the EDII-Hub of Manonmaniam Sundaranar University, Tirunelveli, organized an Entrepreneurship Development Programme for the outgoing students recently. The inaugural session started with the welcome address by Dr. P.P arvathy, Head, Department of Commerce and the presidential address by Dr. K. Rajab Fathima, Principal, where she insisted about the development of proper entrepreneurship for students in order to produce independent and sustainable entrepreneurs who have many ideas and creativity to open a business.